©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 11.20 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 382A] சென்னை, செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 8, 2026
ஆவணி 22, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

பக்கங்கள்

சட்டமுன்வடிவுகள்:

எண். 21/2026.—தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் 2–5

எண். 22/2026.—தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் 7–10

எண். 23/2026.—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) திருத்தச் சட்டம் 11–12

எண். 24/2026.—தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டம் 13–16

எண். 25/2026.—தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. 17–20

எண். 26/2026.—தமிழ்நாடு நிதி ஒதுக்கச்(எண்.3) சட்டம் 21–27

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/2026

தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

பகுதி - I.

முன்னுரை.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி-II.

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின், (இதன்பின்பு இப்பகுதியில் தமிழ்நாடு சட்டம் 14/2019 எனக் குறிப்பிடப்படும்) 4 ஆம் பிரிவின், (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 14/2019.

"(a) தனியார் பல்கலைக்கழகத்திற்கென ஒதுக்கிவைக்கப்பட்ட, அத்தகைய தொடர்ச்சியான நிலமானது –

(i) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குள் அமைந்திருந்தால், பன்னிரண்டு ஏக்கருக்குக் குறையாமலோ; அல்லது

(ii) பிற மாநகராட்சி அல்லது நகராட்சியின் பகுதிக்குள் அமைந்திருந்தால், பதினெட்டு ஏக்கருக்குக் குறையாமலோ; அல்லது

(iii) மேலே (i) மற்றும் (ii) ஆகிய வகைப்பாடுகளில் குறிப்பிடப்பட்ட பகுதிகளைத் தவிர்த்து வேறு எந்தப் பகுதியிலும் அமைந்திருந்தால், இருபத்தைந்து ஏக்கருக்குக் குறையாமலோ இருத்தல் வேண்டும்.

விளக்கம்.– தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக ஒதுக்கபடவுள்ள தொடர்ச்சியான நிலம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட வகை பகுதிகளில் அமைந்திருந்தால், அந்நிலத்தின் பெரும்பகுதி எந்த வகைப் பகுதியில் அமைந்துள்ளதோ, அந்த வகைப் பகுதிக்குரிய குறைந்தபட்ச நில அளவே, தேவையான அளவாகக் கொள்ளப்படும்;".

46 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. தமிழ்நாடு சட்டம் 14/2019 – ன், 46 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது கோடி ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "இருபத்தைந்து கோடி ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி -III.

2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 41 /2018.

4. 2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது கோடி ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "இருபத்தைந்து கோடி ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 41 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

பகுதி -IV.

2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 42 /2018.

5. 2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது கோடி ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "இருபத்தைந்து கோடி ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 41 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

நோக்கக் காரண விளக்கவுரை

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 14/2019), மாநிலத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு வழிவகுக்கிறது. கூறப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (a) கூறின்படி, தமிழ்நாடு மாநிலத்தில் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு நூறு ஏக்கருக்கு குறையாத தொடர்ச்சியான நிலம் தேவைப்படுகிறது. கூறப்பட்ட சட்டத்தின் 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, தனியார் பல்கலைக்கழகம் கலைக்கப்படும் செயல்முறையின் போது அதன் நிர்வாகச் செலவுகளைச் சமாளிப்பதற்காக, பல்கலைக்கழகத்தை நிறுவும் அமைப்பு குறைந்தது ஐம்பது கோடி ரூபாயில் நிலையான அறக்கட்டளை நிதியத்தை நிறுவுதல் வேண்டும்.

2. ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் மீதான தனது உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில், அமைச்சரவைச் செயலாளரின் கீழ் முறையான ஒழுங்குமுறை நீக்கத்தை மேற்கொள்ள, இந்திய அரசு, இணக்கங்களைக் குறைத்தல் மற்றும் ஒழுங்குமுறை நீக்கத்திற்கான இரண்டாம் கட்டப் பணிக்குழுவை அமைத்துள்ளது. தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கான குறைந்தபட்ச நிலத் தேவையை நீக்குவது குறித்தும், உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான குறைந்தபட்ச அறக்கட்டளை நிதித்தேவைகளை அகற்றுவது குறித்தும் மாநிலத் தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டங்களின் தொடர்புடைய வகைமுறைகளைத் திருத்தம் செய்ய கூறப்பட்ட பணிக்குழு பரிந்துரைத்துள்ளது.

3. மேற்கண்ட பரிந்துரைகளை கவனமாக ஆய்வு செய்த பின்னர், பல்வேறு வசதிகளை அமைக்கத் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பைக் கருத்தில் கொண்டு, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ், (தமிழ்நாடு சட்டம் 14/2019) தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான குறைந்தபட்ச நிலத் தேவையை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் நிலப்பற்றாக்குறை இருப்பதைக் கருத்தில் கொண்டு, அப்பகுதியில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க குறைந்தபட்சம் பன்னிரண்டு ஏக்கர் நிலம் தேவை என அரசு முடிவு செய்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர, பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க குறைந்தபட்சம் பதினெட்டு ஏக்கர் நிலம் தேவை என அரசு முடிவு செய்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைத் தவிர மற்ற பகுதிகளில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க குறைந்தபட்சம் இருபத்தைந்து ஏக்கர் நிலம் தேவை என அரசு முடிவு செய்துள்ளது. மேலும், செயல்முறையை எளிதாக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்குத் தேவையான நிலையான அறக்கட்டளை நிதியைக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த மாற்றத்தை, மேற்கண்ட சட்டத்தின்கீழ் ஏற்கனவே மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள தனியார் பல்கலைக்கழகங்களுக்கும், 2018 ஆம் ஆண்டு சிவ் நாடார் பல்கலைக்கழகச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 41/2018) மற்றும் 2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 42/2018) ஆகியவற்றின்கீழ் முறையே நிறுவப்பட்டுள்ள சிவ் நாடார் பல்கலைக்கழகம் மற்றும் சாய் பல்கலைக்கழகத்திற்கும் பொருந்தச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

4. எனவே, மேற்கண்ட நோக்கங்களுக்காக, மேற்சொன்ன சட்டங்களின் தொடர்புடைய வகைமுறைகளைத் தகுந்தவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவுசெய்துள்ளது.

5. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

பெ. விஸ்வநாதன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) ஆம் கூறானது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கையை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்ததல்ல.

பெ. விஸ்வநாதன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/2026

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

8–ஆம் பிரிவின் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) 8 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(7) (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமானது, ஐந்து ஆண்டு காலத்திற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும். மேலும் உரிமத்தை அவ்வப்போது ஐந்து ஆண்டிற்கு புதுப்பிக்கலாம் மற்றும் இச்சட்டத்தின் வகைமுறைகளானது, உரிமம் வழங்குவது தொடர்பாக பொருந்துகிறவாறு, உரிமத்தைப் புதுப்பிப்பது தொடர்பாகவும் அவை இயன்றளவு பொருந்துதல் வேண்டும்.".

8–A பிரிவின் திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 8–A பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) "உரிமம் வழங்கலாம்" எனும் சொற்றொடருக்குப் முன்பு, "இணையவழி மூலம்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(b) "வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் மற்றும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து" எனும் சொற்றொடருக்காக "அரசால் அறிவிக்கப்படலாகும் இணையவலைவாயில் மூலமாக இணையவழியில், அந்த வலைவாயிலின் மூலம் வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் சேர்த்து செலுத்தப்படுதல் வேண்டும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(5) (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமானது, ஐந்து ஆண்டு காலத்திற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும். மேலும், உரிமத்தை அவ்வப்போது ஐந்து ஆண்டிற்கு புதுப்பிக்கலாம் மற்றும் இச்சட்டத்தின் வகைமுறைகளானது, உரிமம் வழங்குவது தொடர்பாக பொருந்துகிறவாறு, உரிமத்தைப் புதுப்பிப்பது தொடர்பாகவும் அவை இயன்றளவு பொருந்துதல் வேண்டும்.".

மாறுதல்கால வகைமுறை.

4. 2 ஆம் மற்றும் 3 ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்பு, முதன்மைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 8–A பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட மற்றும் அத்தொடக்கத் தேதியில் நடைமுறையில் உள்ள உரிமம் எதுவும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடனடி முன்பு இருந்தவாறான, முதன்மைச் சட்டத்தின்கீழ் அது வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட கால அளவிற்குத் தொடர்ந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

நோக்கக் காரண விளக்கவுரை

தமிழ்நாடு அரசானது, தொழில் புரிவதை எளிதாக்குவதற்கும் வாழ்க்கை முறையை எளிமைப்படுத்துவதற்கும் அவற்றை மேம்படுத்துவதிலும், மாநிலத்தை உலகளாவிய மிகவும் விரும்பப்படும் முதலீட்டிற்கான இடமாக மாற்றுவதிலும் மிகவும் உறுதியுடன் உள்ளது. மேலும், 2026 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின் (BRAP) கீழ், வணிகர்களுக்கு வழங்கப்படும் மண்டி உரிமத்தின் செல்லுந்தன்மை காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக நீட்டிக்கவும், ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம் உரிமம் வழங்கும் நடைமுறையை இணையவழி வலைவாயில் மூலமாக செயல்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. தொழில் புரிவதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிமைப்படுத்துதல் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையிலான ஆளுகையை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27 /1989) 8 மற்றும் 8–A பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் செல்லுபடியாகும் காலத்தை ஐந்து ஆண்டுகளாக நீட்டிக்கவும், 8–A பிரிவின்கீழ் உரிமம் கோரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதும் அதற்கான உரிமங்களை வழங்குவதும் இணையவழி மூலமாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்பதை கட்டாயமாக்குவதும் அவசியமாகும்.

3. அதற்கிணங்க, தமிழ்நாடு சட்டம் 27/1989–ஐ மேற்சொன்ன நோக்கங்களுக்காக, திருத்தம் செய்வதென அரசு முடிவுசெய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

ர. வினோத்,
வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் 1 (2) ஆம் மற்றும் 3 ஆம் கூறுகளானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கையை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

ர. வினோத்,
வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/2026

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

நெடுந்தலைப்பிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 14/2022.

2. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) நெடுந்தலைப்பில்,

''சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் அதிகார அமைப்புகள்'' எனும் சொற்றொடருக்காக, ''சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் அதிகார அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,

(1) (c) கூறில், ''அமைப்பு என்பது'' எனும் சொற்களுக்குப் பின்பு, ''நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) (f) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(gg) ''நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு'' என்பது, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், (தமிழ்நாடு சட்டம் 9/1999) 2 ஆம் பிரிவின் (45) ஆம் கூறில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளையே குறிக்கும்.''.

நோக்கக் காரண விளக்கவுரை

மிகவும் திறமையான, தொழில்முறை சார்ந்த மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு செயல்முறையை உறுதி செய்வதற்காக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் உள்ள பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களை நியமனம் செய்வதற்கான ஆட்சேர்ப்பு முறையை மேலும் சிறப்பானதாகவும் ஒரே சீரானதாகவும் அமைப்பது அவசியம் என அரசு கருதியது. இதன் மூலம், மாநிலத்தின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள இளைஞர்களும் இத்தகைய பணியிடங்களுக்கு விண்ணப்பித்து, வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

2. எனவே, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2022)–இன் நோக்கெல்லையை விரிவுபடுத்தி, மாநிலத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் உள்ள பதவிகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கான ஆட்சேர்ப்புப் பணியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் கூடுதல் செயற்பணியாக ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாடு சட்டம் 14/2022–ஐ கூறப்பட்ட நோக்கத்திற்காகத் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

த. சரத்குமார்,
மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/2026

2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 19/2017.

2. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 2–ஆம் பிரிவில்,–

(a) (80)–ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(80A) "இணையவழி விளையாட்டு" என்பது, இணையம் அல்லது ஒரு மின்னணு வலையமைப்பில் ஒரு விளையாட்டை வழங்குவது என்று பொருள்படும் மற்றும் இது இணையவழி பண விளையாட்டையும் உள்ளடக்கும்;

(80B) "இணையவழி பண விளையாட்டு" என்பது, ஒரு விளையாட்டு, திட்டம், போட்டி அல்லது ஏதேனும் பிற செயல்பாடு அல்லது நடைமுறை உள்ளடங்கலாக எந்தவொரு நிகழ்விலும், பணம் அல்லது பண மதிப்புடைய பொருளை வெல்லும் நோக்கில், விளையாடுபவர்கள், அந்த விளையாட்டின் முடிவு அல்லது செயல்திறனானது திறமை, தற்செயல் அல்லது இவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அது தற்போது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் மெய்நிகர் இலக்கமுறை சொத்துகள் உள்ளடங்கலாக, பணம் அல்லது பண மதிப்புடைய பொருளைச் செலுத்தி அல்லது வைப்புத் தொகையாகச் செலுத்தி இணையவழியில் விளையாடும் விளையாட்டு என்று பொருள்படும்;";

(b) (102)–ஆம் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(102A) "குறிப்பிட்ட வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகள்" என்பது பின்வருவனவற்றில் அல்லது அதன்மூலம் எழும் வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகள் என்று பொருள்படும்—

(i) பந்தயம் கட்டுதல்;

(ii) சூதாட்டவிடுதிகள் (casinos);

(iii) சூதாட்டம்;

(iv) குதிரைப் பந்தயம்;

(v) பரிசுச் சீட்டு (lottery); அல்லது

(vi) இணையவழி பண விளையாட்டு;";

(c) (105)–ஆம் கூறில், பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"வரம்புரையாக, குறிப்பிட்ட வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகளின் வழங்கலுக்காக பயன்படுத்தப்படும் இலக்கமுறை அல்லது மின்னணுத் தளத்தை சொந்தமாக வைத்திருப்பவர், இயக்குபவர் அல்லது நிர்வகிப்பவர் உள்ளடங்கலாக, அத்தகைய கோரிக்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்குவதற்கு ஏற்பாடு செய்பவர் அல்லது முறைப்படுத்துகிறவர், அத்தகைய வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகளானது அவராலோ அல்லது அவர் மூலமாகவோ வழங்கப்பட்டாலும், அதற்கான பணம் அல்லது பண மதிப்பிலான மறுபயனானது, மெய்நிகர் இலக்கமுறை சொத்துக்கள் உட்பட, அவருக்கோ அல்லது அவர் மூலமாகவோ செலுத்தப்பட்டாலும் அல்லது அவருக்கு மாற்றி வழங்கப்பட்டாலும் அல்லது ஏதேனும் முறையில் அவரது பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டாலும், அவர் அத்தகைய வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகளை வழங்குபவராகக் கருதப்படுவார். மேலும், இச்சட்டத்தின் அனைத்த வகைமுறைகளும், அத்தகைய வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகளின் வழங்கல் தொடர்பாக வரி செலுத்த வேண்டிய வழங்குநரைப் போன்று, அத்தகைய குறிப்பிடத்தக்க வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கை வழங்குநருக்குப் பொருந்துதல் வேண்டும்.".

(d) (117)–ஆம் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(117A) "மெய்நிகர் இலக்கமுறையிலான சொத்து" என்பது 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 43/1961) 2–ஆம் பிரிவின் (47A) கூறில் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;".

24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 24–ஆம் பிரிவில்,–

(a) (xi) கூறில், இறுதியில் வருகின்ற "மற்றும்" எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) (xi) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(xia) இந்தியாவுக்கு வெளியே உள்ள ஒரு இடத்திலிருந்து இந்தியாவில் உள்ள ஒரு நபருக்கு இணையவழி பண விளையாட்டுகளை வழங்கும் நபர் ஒவ்வொருவரும்; மற்றும்".

III–ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் III–ஆம் இணைப்புப்பட்டியலில் உள்ள, 6–ஆம் பத்தியில், "பரிசுச் சீட்டு, பந்தயம் மற்றும் சூதாட்டம்" எனும் சொற்றொடர்களுக்காக "குறிப்பிட்ட வழக்குத் தொடரத்தக்க உரிமம் கோரிக்கைகள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

மாறுதல்கால வகைமுறை.

5. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட திருத்தங்களானது, அவ்வப்போது நடைமுறையில் உள்ள ஏதேனும் பிற சட்டத்தின் வகைமுறைகளுக்கு குந்தகமின்றி, பந்தயம், சூதாட்டவிடுதிகள், சூதாட்டம், குதிரைப் பந்தயம், பரிசுச் சீட்டு அல்லது இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்தல், கட்டுப்படுத்துதல் அல்லது ஒழுங்குபடுத்துகிறது.

நோக்கக் காரண விளக்கவுரை.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 50–வது மற்றும் 51–வது கூட்டங்களில், சூதாட்ட விடுதிகள், குதிரைப் பந்தயம் மற்றும் இணையவழி விளையாட்டுகளுக்கு வரி விதிப்பது தொடர்பான பொருட்பாடுகள் குறித்து பல்வேறு சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்தது. மேற்கண்ட பொருட்பாடு தொடர்பாக தெளிவை ஏற்படுத்தும் வகையில் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மன்றம் பரிந்துரைத்தது. மேற்கண்ட பரிந்துரைக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், மைய அரசானது, 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் (மையச் சட்டம் 12/2017), 2023–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டத்தின் (மையச் சட்டம் 30/2023) மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

2. கூறப்பட்ட மையச் சட்டம் 12/2017 மற்றும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 19/2017) ஆகியவற்றின் வகைமுறைகளில் ஒரே சீரான தன்மையைப் பேணுவதற்காக, பந்தயம் கட்டுதல், சூதாட்ட விடுதிகள், சூதாட்டம், குதிரைப் பந்தயம், பரிசுச் சீட்டு அல்லது இணையவழி பணச் சூதாட்டம் ஆகியவற்றைத் தடைசெய்யும், கட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் தற்போது நடைமுறையில் உள்ள ஏதேனும் பிற சட்டத்தின் வகைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில், கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–ஐ திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

த. லோகேஷ் தமிழ்செல்வன்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/2026

2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (i) 5–ஆம் பிரிவானது, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ii) இந்தச் சட்டத்தின் பிற பிரிவுகளானது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக அரசிதழில் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

15–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 19/2017.

2. 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின், (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 15–ஆம் பிரிவின், (3)–ஆம் உட்பிரிவில், (b) கூறுக்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(b) வழங்குகை மேற்கொள்ளப்பட்ட பின், அத்தகைய கழிவுக்காக வழங்குநரால் வரவு குறிப்பு வழங்கப்பட்டு, அக்கழிவுக்குத் தொடர்புடைய உள்ளீட்டு வரி வரவை, வழங்குகையைப் பெற்றவர், 34–ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி திரும்பச் செலுத்தியிருந்தால்;".

34–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 34–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் உள்ள "வழங்கப்பட்ட இரண்டும் குறைவாக இருப்பதாக காணப்படுகிறவிடத்து" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "அல்லது 15–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவில் (b) கூறில் சுட்டப்பட்டுள்ள கழிவு வழங்கப்படுமிடத்து" எனும் சொற்றொடரானது, உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

54–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 54–ஆம் பிரிவில்,–

(1) (6)–ஆம் உட்பிரிவில், "சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "அல்லது (3)–ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரையின் (ii) கூறின் கீழ் அனுமதிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவு" எனும் சொற்றொடரானது, உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) (14)–ஆம் உட்பிரிவில், "(5)–ஆம் உட்பிரிவு அல்லது (6)–ஆம் உட்பிரிவு" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "இந்தியாவிற்கு வெளியே சரக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டதன் பேரில், செலுத்தப்பட்ட வரியைத் திரும்ப கோரும் நேர்வுகளைத் தவிர" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

101 A பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 101 A பிரிவானது, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறுஎண்ணிடப்படுதல் வேண்டும். அவ்வாறு மறுஎண்ணிடப்பட்ட (1)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2) (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 12/2017) 101A பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் முன்கூட்டியே தீர்மானிக்கும் தேசிய மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது அமைத்துருவாக்கப்படும் வரையில், கூறப்பட்ட மையச் சட்டம் 12/2017 –இன் 101A பிரிவின் (1A) உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட, தற்போது இருந்துவரும் அதிகார அமைப்பு எதுவும், இந்தச் சட்டத்தின்கீழ் முன்கூட்டியே தீர்மானிக்கும் தேசிய மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக கருதப்படுதல் வேண்டும்.".

நோக்கக் காரண விளக்கவுரை.

30.03.2026 அன்று குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்ற 2026–ஆம் ஆண்டின் நிதி சட்டத்தின் (மையச் சட்டம் எண் 4/2026) வாயிலாக, இந்திய அரசு 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் (மையச் சட்டம் 12/2017) குறித்த சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. கூறப்பட்ட மையச் சட்டம் 12/2017 மற்றும் 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 19/2017) ஆகியவற்றின் வகைமுறைகளில் ஒரே சீரான தன்மையைப் பேணுவதற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

த. லோகேஷ் தமிழ்செல்வன்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1 (2)–ஆம் கூறானது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

த. லோகேஷ் தமிழ்செல்வன்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/2026

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்(எண். 3) சட்டம் என வழங்கப்பெறும்.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.

தமிழ்நாடு சட்டம் 6/2026.

2. மாநில அரசு, 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டத்தின் 2–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மூன்று இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று இருபத்தியேழு கோடியே மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் தொகையை உள்ளடக்குகின்றதும், 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுவதுமான ஐந்து இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து எழுநூற்று ஒன்பது கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

இணைப்புப் பட்டியல்.
(2–ஆம் பிரிவைக் காண்க).

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
001	மாநில சட்டமன்றம்	**வருவாய்**	81,51,01,000	*53,65,000*	82,04,66,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
002	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	**வருவாய்**	75,50,70,000	*23,34,48,000*	98,85,18,000
		மூலதனம்	...	*6,000*	6,000
		கடன்	...	...	...
003	நீதி நிருவாகம்	**வருவாய்**	2,037,21,41,000	*449,27,64,000*	2,486,49,05,000
		மூலதனம்	8,000	*2,000*	10,000
		கடன்	...	...	...
004	சமூக நீதித் துறை	**வருவாய்**	3,016,24,99,000	*20,00,53,000*	3,036,25,52,000
		மூலதனம்	900,33,97,000	...	900,33,97,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
005	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	**வருவாய்**	14,780,71,16,000	*14,88,000*	14,780,86,04,000
		மூலதனம்	201,74,69,000	...	201,74,69,000
		கடன்	2,00,02,000	...	2,00,02,000
006	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	**வருவாய்**	1,806,31,26,000	*7,000*	1,806,31,33,000
		மூலதனம்	186,70,21,000	...	186,70,21,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
007	மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	**வருவாய்**	799,61,95,000	*24,08,000*	799,86,03,000
		மூலதனம்	736,14,02,000	...	736,14,02,000
		கடன்	...	...	...
008	பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	**வருவாய்**	250,30,70,000	*1,000*	250,30,71,000
		மூலதனம்	600,00,09,000	...	600,00,09,000
		கடன்	500,00,01,000	...	500,00,01,000
009	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	**வருவாய்**	1,415,04,00,000	*3,00,05,000*	1,418,04,05,000
		மூலதனம்	280,78,94,000	...	280,78,94,000
		கடன்	94,00,000	...	94,00,000
010	வணிகவரிகள் (வணிகவரி, பதிவு மற்றும் அறநிலையங்கள் துறை)	**வருவாய்**	650,40,29,000	*3,000*	650,40,32,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
011	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி, பதிவு மற்றும் அறநிலையங்கள் துறை)	**வருவாய்**	474,66,96,000	*1,000*	474,66,97,000
		மூலதனம்	7,000	...	7,000
		கடன்	...	...	...
012	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	**வருவாய்**	8,026,59,55,000	*9,33,000*	8,026,68,88,000
		மூலதனம்	12,000	...	12,000
		கடன்	2,00,00,000	...	2,00,00,000

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு சார்ட்டப்பட்டது	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
013	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	வருவாய்	14,529,79,71,000	*3,000*	14,529,79,74,000
		மூலதனம்	300,00,08,000	...	300,00,08,000
		கடன்	...	...	...
014	எரிசக்தித் துறை	வருவாய்	15,110,71,97,000	*1,000*	15,110,71,98,000
		மூலதனம்	92,80,08,000	...	92,80,08,000
		கடன்	624,95,03,000	...	624,95,03,000
015	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)	வருவாய்	102,44,48,000	*1,000*	102,44,49,000
		மூலதனம்	72,00,08,000	...	72,00,08,000
		கடன்	5,00,00,000	...	5,00,00,000
016	நிதித் துறை	வருவாய்	5,184,27,15,000	*17,000*	5,184,27,32,000
		மூலதனம்	15,36,61,000	...	15,36,61,000
		கடன்	226,57,18,000	...	226,57,18,000
017	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	வருவாய்	1,667,20,60,000	*2,000*	1,667,20,62,000
		மூலதனம்	10,00,08,000	...	10,00,08,000
		கடன்	50,04,000	...	50,04,000
018	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	வருவாய்	251,30,11,000	*2,000*	251,30,13,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	1,000	...	1,000
019	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	வருவாய்	22,436,84,19,000	*1,21,70,000*	22,438,05,89,000
		மூலதனம்	918,41,93,000	*1,000*	918,41,94,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
020	உயர்கல்வித் துறை	வருவாய்	7,734,10,62,000	*2,000*	7,734,10,64,000
		மூலதனம்	658,55,03,000	*2,000*	658,55,05,000
		கடன்	50,00,000	...	50,00,000
021	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	வருவாய்	2,280,82,52,000	*14,73,000*	2,280,97,25,000
		மூலதனம்	19,231,55,11,000	*10,50,41,000*	19,242,05,52,000
		கடன்	50,00,000	...	50,00,000
022	காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	13,955,75,07,000	*6,20,09,000*	13,961,95,16,000
		மூலதனம்	566,58,01,000	...	566,58,01,000
		கடன்	23,50,01,000	...	23,50,01,000
023	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	587,50,53,000	*4,95,000*	587,55,48,000
		மூலதனம்	87,01,17,000	...	87,01,17,000
		கடன்	...	...	...
024	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	570,88,45,000	*5,02,000*	570,93,47,000
		மூலதனம்	300,00,07,000	...	300,00,07,000
		கடன்	...	...	...
025	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	848,33,44,000	*1,000*	848,33,45,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு சாட்டப்பட்டது	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
026	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	வருவாய்	3,363,10,72,000	*1,000*	3,363,10,73,000
		மூலதனம்	10,000	...	10,000
		கடன்	5,489,00,03,000	...	5,489,00,03,000
027	தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை	வருவாய்	2,216,74,35,000	*20,54,83,000*	2,237,29,18,000
		மூலதனம்	1,515,83,75,000	*1,000*	1,515,83,76,000
		கடன்	660,51,92,000	...	660,51,92,000
028	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	வருவாய்	292,76,94,000	*1,000*	292,76,95,000
		மூலதனம்	8,000	...	8,000
		கடன்	...	...	...
029	சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை)	வருவாய்	375,43,37,000	*7,000*	375,43,44,000
		மூலதனம்	397,61,31,000	...	397,61,31,000
		கடன்	2,00,00,000	...	2,00,00,000
030	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	வருவாய்	183,72,53,000	*10,04,000*	183,82,57,000
		மூலதனம்	8,000	...	8,000
		கடன்	...	...	...
031	தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை	வருவாய்	288,39,59,000	*1,000*	288,39,60,000
		மூலதனம்	109,06,55,000	...	109,06,55,000
		கடன்	50,00,000	...	50,00,000
032	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	வருவாய்	1,800,98,75,000	*4,000*	1,800,98,79,000
		மூலதனம்	219,32,52,000	*1,000*	219,32,53,000
		கடன்	2,20,00,000	...	2,20,00,000
033	சட்டத் துறை	வருவாய்	122,79,90,000	...	122,79,90,000
		மூலதனம்	10,000	...	10,000
		கடன்	2,00,00,000	...	2,00,00,000
034	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	வருவாய்	17,246,59,85,000	*29,28,000*	17,246,89,13,000
		மூலதனம்	11,331,20,18,000	...	11,331,20,18,000
		கடன்	1,284,79,03,000	...	1,284,79,03,000
035	மனிதவள மேலாண்மைத் துறை	வருவாய்	202,27,96,000	*165,87,96,000*	368,15,92,000
		மூலதனம்	53,05,83,000	...	53,05,83,000
		கடன்	3,00,00,000	...	3,00,00,000
036	திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	வருவாய்	365,68,91,000	*8,000*	365,68,99,000
		மூலதனம்	99,25,07,000	...	99,25,07,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
037	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	343,98,13,000	*2,000*	343,98,15,000
		மூலதனம்	14,48,000	...	14,48,000
		கடன்	...	...	...
038	பொதுத் துறை	வருவாய்	1,743,35,58,000	*5,52,07,000*	1,748,87,65,000
		மூலதனம்	133,15,29,000	...	133,15,29,000
		கடன்	10,25,00,000	...	10,25,00,000

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
039	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	**வருவாய்**	521,64,06,000	*1,000*	521,64,07,000
		மூலதனம்	1,394,07,75,000	...	1,394,07,75,000
		கடன்	80,00,000	...	80,00,000
040	நீர்வளத் துறை	**வருவாய்**	5,006,75,57,000	*2,000*	5,006,75,59,000
		மூலதனம்	4,247,62,24,000	*8,65,06,000*	4,256,27,30,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
041	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	**வருவாய்**	8,816,97,57,000	*30,04,000*	8,817,27,61,000
		மூலதனம்	7,000	*2,46,000*	2,53,000
		கடன்	1,78,82,000	...	1,78,82,000
042	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	**வருவாய்**	33,970,32,57,000	*4,000*	33,970,32,61,000
		மூலதனம்	5,638,09,15,000	...	5,638,09,15,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
043	பள்ளிக் கல்வித் துறை	**வருவாய்**	42,980,63,52,000	*24,67,000*	42,980,88,19,000
		மூலதனம்	1,545,29,25,000	*1,000*	1,545,29,26,000
		கடன்	1,20,00,000	...	1,20,00,000
044	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	**வருவாய்**	2,141,85,61,000	*1,000*	2,141,85,62,000
		மூலதனம்	9,000	...	9,000
		கடன்	50,01,000	...	50,01,000
045	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	**வருவாய்**	9,794,12,73,000	...	9,794,12,73,000
		மூலதனம்	23,40,19,000	...	23,40,19,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
046	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	**வருவாய்**	138,05,96,000	*3,000*	138,05,99,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
047	இந்து சமய அறநிலையத் துறை (வணிகவரி, பதிவு மற்றும் அறநிலையங்கள் துறை)	**வருவாய்**	665,33,39,000	*18,00,00,000*	683,33,39,000
		மூலதனம்	25,05,61,000	...	25,05,61,000
		கடன்	...	...	...
048	போக்குவரத்துத் துறை	**வருவாய்**	8,673,56,55,000	*1,000*	8,673,56,56,000
		மூலதனம்	3,946,36,07,000	...	3,946,36,07,000
		கடன்	941,53,09,000	...	941,53,09,000
049	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	**வருவாய்**	697,36,20,000	*1,000*	697,36,21,000
		மூலதனம்	353,59,42,000	...	353,59,42,000
		கடன்	50,00,000	...	50,00,000
050	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	**வருவாய்**	47,172,69,63,000	*67,05,03,000*	47,239,74,66,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
051	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	**வருவாய்**	2,713,13,64,000	*2,000*	2,713,13,66,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
052	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	**வருவாய்**	1,481,83,16,000	*1,000*	1,481,83,17,000
		மூலதனம்	3,34,38,000	...	3,34,38,000
		கடன்	1,000	...	1,000
053	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	**வருவாய்**	17,140,55,14,000	...	17,140,55,14,000
		மூலதனம்	10,00,06,000	...	10,00,06,000
		கடன்	...	...	...
054	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)	**வருவாய்**	781,96,21,000	*2,64,000*	781,98,85,000
		மூலதனம்	800,42,66,000	...	800,42,66,000
		கடன்	1,000	...	1,000
055	இயற்கை வளங்கள் துறை	**வருவாய்**	434,09,52,000	*1,000*	434,09,53,000
		மூலதனம்	3,00,07,000	...	3,00,07,000
		கடன்	50,00,000	...	50,00,000
	கடன் செலவுகள்	**வருவாய்**	...	*76,782,16,31,000*	76,782,16,31,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
	பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்	**வருவாய்**	...	...	...
		மூலதனம்	...	...	...
		கடன்	...	*51,970,58,34,000*	51,970,58,34,000
	மொத்தம்	**வருவாய்**	**330,350,90,43,000**	***77,564,44,82,000***	**407,915,35,25,000**
		மூலதனம்	**57,006,93,09,000**	***19,18,07,000***	**57,026,11,16,000**
		கடன்	**9,797,54,22,000**	***51,970,58,34,000***	**61,768,12,56,000**
	பெருமொத்தம்		**397,155,37,74,000**	***129,554,21,23,000***	**526,709,58,97,000**

நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது–

(a) 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின் மீது *சாட்டப்பட்ட* செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகைகளை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

முனைவர் நெ. மரிய வில்சன்,
நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 8.

இரா. சாந்தி,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.